DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 177 /2018 |
| Deposition of witness | : | P. W– 2 |
| Name | : | இன்பரசி |
| Father's /Husband Name | : | பக்கிரிசாமி |
| Village | : | பூந்தோட்டம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 55 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th day September, 2025. Accused A1 absent petition u/s 355 BNSS filed and allowed. A2 present.

**முதல் விசாரணை:–**

ஆஜர் எதிரியையும், அவரது மனைவியையும் எனக்கு தெரியும். கடந்த 2012ம் வருடம் தேதி சரியாக நினைவில்லை. ரூபாய் இரண்டு இலட்சம் தொகை கடனாக இரண்டாவது எதிரி கேட்டார். அதற்கு ஈடாக பெந்தக பத்திரத்தை பேரளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1–வது எதிரியான மகேஸ்வரியும், 2–வது எதிரியான விஜயபாபுவும் எழுதி பதிவு செய்து கொடுத்தார்கள். நான் கொடுத்த தொகையை எதிரிகளிடம் கேட்டேன். அவர்கள் மேற்படி எனது கடனை கொடுத்து மேற்படி பெந்தக பத்திரத்தை ரத்து செய்து எதிரிகளிடம் கொடுத்துவிட்டேன். இவ்வழக்கில் வாதியான அ.சா.1 பாஸ்கரன் என்பவரை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பில் சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு பாஸ்கரை தெரியும் என்று போலிசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. அ.சா.1–ஐ ஆஜர் எதிரிகள் நான் பெந்தகம் பெற்ற இடத்தை கிரயம் செய்து தறுவதாக சொல்லி ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரத்தை பெற்றுக்கொண்டுவிட்டு எதிரிகள் சொன்னபடி அ.சா.1 கிரயம் செய்து தரவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போலிசார் விசாரிக்க நடந்த உண்மையை சொல்லிவிட்டு தற்போது பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.09.19 16:44:37 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 177 /2018 |
| Deposition of witness | : | P. W- 3 |
| Name | : | ஜெயலெட்சுமி |
| Father's /Husband Name | : | வேதநாயகம் |
| Village | : | மேலருத்திரகங்கை |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 76 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th day September, 2025.
Accused A1 absent petition u/s 355 BNSS filed and allowed. A2 present.

**முதல் விசாரணை:-**

ஆஜர் எதிரியையும், அவரது மனைவியையும் எனக்கு தெரியும். அவர்கள் எனது வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார்கள். அ.சா.1 பாஸ்கரை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.
(அரசுத்தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு பாஸ்கரை தெரியும் என்று போலிசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் எதிரிகளை பற்றி அ.சா.1 எதிரிகளால் ஏமாற்றப்பட்டதை பற்றி கேள்விபட்டதாக போலிசார் விசாரிக்க வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகள் எனது வீட்டில் வாடகைக்கு குடியிருப்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.09.19 16:44:44 +0530